**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **C.C.No. 337/2017**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 2

Defence

Court

Name : நம்பிராஜன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 05th January 2021.

**முதல் விசாரணை**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் ஊரக உட்கோட்டம் தனிப்பிரிவு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2016 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் தாளமுத்து நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த வந்த போது 19.12.2016 அன்று எனக்கு கிடைத்த ரகசிய தகவலை பதிவு செய்தேன், அந்த தகவல் அ.சா.ஆ.2 ஆகும். பின்னர் ரகசிய தகவலின் அடிப்படையில் போலீஸ் பார்ட்டியாக தலைமை காவலர் 1062 திரு.பழனிச்சாமி, மற்றும் பெண் தலைமை காவலர் 290 இசக்கியம்மாள் என்ற கார்த்திகா ஆகியோருடன் லூர்தம்மாள்புரம், முருகன் தியேட்டர் அருகில் ரோந்து சென்ற போது எங்களை பார்த்ததும் தென் திசையில் நடக்க முயற்சி செய்தவரை பெண் காவலரை வைத்து மடக்கி பிடித்து விசாரிக்க பின்னர் பெயர் விலாசம் தெரிய பெற்ற

மதுரை, கரிமேடு, பெத்தன்னையா புரம் பகுதியை சார்ந்த சிவசாமி என்பவரது மனைவி கருப்பாயி, வயது 47 என்பவரை விசாரிக்க பெயர் விலாசம் கூறியவரை அவரையும், அவரது கையில் இருந்த கட்டைப்பையையும் சோதனை செய்வதற்கு சோதனை சம்மத கடிதம் பெற்றேன். அந்த சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ-3 ஆகும். பின்னர் எதிரியை விசாரித்த போது மதுரையில் இருந்து இனம் தெரியாத நபரிடம் இருந்து கஞ்சா வாங்கி தூத்துக்குடியில் விற்க வந்ததாக கூறியவரிடம் தொடர்ந்து விசாரணை செய்து அவரது கையில் வைத்திருந்த பையை சோதனை செய்த போது கட்டைப்பையில் இருந்த பிளாஸ்டிக் பையில் 2.500 கிலோகிராம் கஞ்சா இருந்தது தெரிய வந்தது. அதிலிருந்து 50 கிராம் கஞ்சாவை ஒரு காக்கி கவரில் மடித்து நூல் சுற்றி SHO சீல் வைத்தும் பின்னர் மீதமுள்ள 2.450 கிலோகிராம் கஞ்சாவை அதே பிளாஸ்டிக் பையில் வைத்து, காக்கி கவர் சுற்றி நூலால் சுற்றி அதே பையில் வைத்து எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் காவல் நிலையம் கொண்டு செல்வதற்காக அத்தாட்சி தயார் செய்தேன், அது ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அத்தாட்சியில் பொது மக்கள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராத காரணத்தால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையெழுத்து செய்து எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 17.30 மணிக்கு தாளமுத்து காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு எண்.713/2016, ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act ன்படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். முதல் தகவல் அறிக்கை மற்றும் அத்தாட்சியை இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தகவல் மதியம் 3.30 மணியளவில் கிடைத்து. தகவல் கிடைத்த பின்பு தகவலை பதிவு செய்ய சுமார் 15 நிமிடங்கள் ஆனது. தகவல் எனக்கு கிடைத்த சமயத்தில் காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் இல்லை. தகவல் வந்த பிறகு காவல் நிலையத்தில் 15 நிமிடங்கள் தான் இருந்தேன். அந்த கால இடைவெளியில் நான் கிராம நிர்வாக அலுவலர், தலையாரி ஆகியோரை சாட்சியாக இருக்கும்படி அழைக்கவில்லை. காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் சுமார் 3 கீ.மீ தென் கிழக்கு திசையில் இருந்தது. காவல் ஆய்வாளர்

விசாரணையில் நான் தகவல் 4.00 மணிக்கு கிடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் தகவல் கிடைத்த நேரம் 17.30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 4 லில் தகவலாளி மூலம் தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால், குறிப்பிடவில்லை, அதை பொருத்து புகார் யார் கொடுக்கிறார்களோ அவர்கள் பெயரை தான் குறிப்பிடுவது வழக்கம், அந்த விவரங்களை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. பொது நாட்குறிப்பில் பதிந்த விவரத்தை ஆய்வாளரிடம் சொல்லவில்லை. சம்பவ இடத்திற்கு நாங்கள் இருசக்கர வாகனத்தில் தான் சென்றோம். சோதனை சம்மத கடிதத்தில் எதிரியின் பெயர், வயது விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது. சோதனை சம்மத கடிதத்தில் பெண் காவல் தான் சோதனை செய்தார் என்று வாசகங்கள் இல்லை என்றால், தவறு சோதனை சம்மத கடிதத்தில் அது பற்றி விவரங்கள் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். உடன் வந்த பெண் காவலர் மற்றும் காவலர்கள் சோதனை சம்மத கடிதத்தில் கையெழுத்து செய்யவில்லை. எதிரியின் கையெழுத்துக்கு கீழ் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். அத்தாட்சி, சோதனை சம்மத கடிதம், தகவல் ஆகியவற்றை நான் தான் எழுதினேன். தகவலை உயர் அதிகாரி பெற்றுக் கொண்டதற்கான எந்த ஆவணமும் இல்லை என்றால், சரிதான். தகவலின் நகலை உயர் அதிகாரிக்கு வழங்கியதாக எந்த வாசகமும் இல்லை என்றால், சரிதான். பிரிவு 57 ன்கீழ் விரிவான அறிக்கையை உயர் அதிகாரிக்கு கொடுத்தேனா என்றால், கொடுக்கவில்லை. கைது நமூனா சம்பவ இடத்தில் தயார் செய்யவில்லை. காவல் நிலையத்தில் வைத்து கைது நமூனா தயார் செய்யப்பட்டது. அத்தாட்சி தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை. அத்தாட்சியின் நகல் எதிரிக்கு வழங்கியதாக அத்தாட்சியில் குறிப்பிடப்படவில்லை. தனிநபர் சாட்சிகள் யார் வரவில்லை என்ற விவரம் அத்தாட்சியில் குறிப்பிடவில்லை. SHO சீலின் மாதிரி அத்தாட்சியில் பதிக்கவில்லை. சாட்சியம் அளிக்க வரமறுத்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. சம்பவ இடத்திற்கு காவல் ஆய்வாளர் வரவில்லை. காவல் ஆய்வாளர் விசாரணையில் எந்த மிஷினில் வைத்து எடை போடப்பட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் பார்வை மகஜர், வரைபடம் எதுவும் தயார் செய்யப்படவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றாலும், வழக்கின் சொத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல. எதிரியின்

மீது கணக்கிற்காக பொய்யான வழக்கு போட்டுள்ளேன் என்றால், சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால், சரிதான்.